# 51

## ஆகுலம்

'ஆகுல நீரபிற' என்ற குறளடியில் வரும் "ஆகுலம்" வடமொழி என்று என் நண்பர் கூறுகிறார். அதுபற்றி விளக்கியுதவுக என நமக்கு ஓர் அஞ்சல் கிடைத்துள்ளது. ஆகுலச் சொல்பற்றி முன்னொரு முறை* (*தொடர் எண் 11ஐப் பார்க்க) விளக்கினேன் ஆக நினைக்கிறேன். இருப்பினும் தெளிவுறுத்த எண்ணுகிறேன். அகங்கலித்தல், அங்கலித்தல், அங்காலித்தல், அங்கலாய்ப்பு, ஆகலித்தல், ஆகுலித்தல், ஆகுலம் அனைத்தும் ஒரு பொருளுடையவை. அகம் கலித்தலின் மரூஉக்களே. உள்ளக் கருத்தே வெளியில் ஒலிப்பது என்பது பொருள். ஆகுலம் ஒலி என்பது காண்க. வருத்தமுமாம். எனவே ஆகுலம் தூய தமிழ்க் காரணப் பெயர் என்று கடைபிடியுங்கள்.

"ஆகுலம் வருத்தம் ஓசை" நாநார்த்ததீபிகை 55: இதன் உரையில் ஆகுலம் என்ற சொல் வடமொழியில் இல்லாமை குறிக்கப்பட்டதும் காண்க.

## மங்களம், மங்கலம்

மங்களம் என்பது மங்கலம் என்ற தூய தமிழ்க் காரணப் பெயர். வடவரால் திரிக்கப்பட்ட சொல்.

மங்கு+அலம்; மங்குதல் அல்லாத நிலை என்பது பொருள்; இலம் – வறுமை! இல்லாத நிலை என்பதிற்போல.

எனவே மங்கலம் தூய தமிழ்க் காரணப் பெயர் என்பதும், மங்களம் அதன் திரிபு என்பதும் நினைவிற்கொள்க.

## உஷ்ட்ர

இது வடமொழியில் ஒட்டகத்தின் பெயர். இப்பெயர் வடவர்க்கு எங்கிருந்து கிடைத்தது? தமிழில் இருந்த ஒட்டகத்தையே இவ்வாறு திரித்து மேற்கொண்டனர். ஒட்டகம் குளிர்ந்த நாடாகிய வடநாட்டில்

இல்லை. பொருளில்லாதபோது பெயருமிராதன்றோ! தமிழில் ஒட்டகம் உண்டா? ஒட்டகம் என்ற பெயரால் குறிக்கப்படும் பொருள் தமிழகத்தில் உண்டா? இரண்டும் உண்டு.

"ஒட்டகம் அவற்றோடு ஒரு வழிநிலையும்" என்பது தொல்காப்பிய மரபியல் நூற்பா.

இதனால் ஆறாயிரம் ஆண்டுகட்குமுன் தோன்றிய தொல்காப்பியத்தில் ஒட்டகம் என்ற சொல் காணப்படுகின்றதல்லவா?

இனி, ஒட்டகம் தமிழகத்தில் இருந்ததா எனில், கூறுவோம்.

இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகட்குமுன் கடலால் விழுங்கப்பட்ட தென் தமிழ்க் குமரி நாட்டினிடையில் இருந்த பாலை நிலத்தைக் கடக்க உதவும் பொருட்டு இயற்கை தர இருந்தது ஒட்டகம்! இதன் விரிவை மறைமலை அடிகளார் அருளிச் செய்த 'மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்' என்ற நூலின் 762,763,764-ம் பக்கங்களில் கண்டு மகிழ்க.

எனவே உஷ்ட்ர என்பது ஒட்டகம் என்ற தூய தமிழ்க் காரணப் பெயரின் சிதைவே என்பது பெறப்பட்டது.

ஒட்டகம், ஒட்டு + அகம் எனப் பிரிந்து, உதவும் உள்ளமுடையது எனப் பொருள் பயப்பது. இது - ஒட்டை எனவும் வழங்கும். அது இழிவழக்கு.

**- குயில், 9.6.1959**

## 52

### தூலம்

ஸ்தூலம் என்ற வடசொல்லுக்கும், தூலம் என்ற தூய தமிழ்க் காரணப் பெயருக்கும் தொடர்பு உண்டு என்று எண்ணுவோரும் இருக்கின்றார்கள்.

சுலவு என்ற சொல்லடியாகத் தோன்றிய பல சொற்களில் தூலமும் ஒன்று என்று உணர்தல் வேண்டும். தூலம், சுற்றி நீண்டது. காரணப் பெயர்.

### இலேசு

இது இளை து என்றதன் மரூஉ. 'இளைதாக முண்மரம் கொல்க' என்ற குறளடி காண்க. இளைது, இளைப்பம், இளப்பம், இளசி என்பன ஒரு பொருளன. முதுமையால் பெறப்படும் வன்மை இலாதது. இது புலன்களுக்குப் புலப்படுவதில் அரிதின்மையையும், தூக்குவதற்குத் தொல்லையின்மையையும் குறித்து வழங்குகிறது.

### பலபம்

பலகை என்ற சொல் ஈறு திரிந்த ஓர் ஆகுபெயர். பலகை - கற்பலகை; அதன் துகள் குழைத்துச் செய்த கற்குச்சி பலபம்.

எனவே பலபம் வந்தவர் மொழியன்று.

### சுலபம்

இது சுளுவு என்றும் மருவி வழங்கும், சுலவு என்பதினின்று தோன்றியது. புலன்களுக்கு அண்மையானது. இதை வடசொல் என்று எண்ணி மலைத்தல் வேண்டாம். இது செந்தமிழ்ச் செல்வமே.

- குயில், 16.6.1959

## 53

### தாளம்

தாள் - ஒட்டு; இசையில் கால அளவுடைய ஓர் அசையும் மற்றோர் அசையும் ஒட்ட வைப்பதோர் ஒட்டு, ஆகுபெயர். அம் சாரியை குன்றம் என்பதிற் போல.

இதை வடசொல் என்று காட்டும் வடவரைப் பின்பற்றித் தமிழரும் அவ்வாறே எண்ணியிருக்கின்றனர். எனவே 'தாளம்' வந்தவர் மொழியன்று, செந்தமிழ்ச் செல்வமே.

### மேளம்

இது வடசொல் அன்று. மேழம் என்பதின் திரிபு. மேழம் - ஆடு. ஆட்டுத் தோலால் ஆனது மேழம், மேளம் ஆகுபெயர். எனவே மேளம் தூய தமிழ்க் காரணப் பெயர் எனக் கடைப்பிடிக்க.

### அருச்சனை

இது வடசொல் என்று மயங்கற்க! அருத்தனை என்பதின் போலி. அருத்து முதனிலை. அன் சாரியை. ஐ தொழிற் பெயர் இறுதிநிலை. அருத்துதல் என்பதில் அருத்து முதனிலை. தல் தொழிற் பெயர் இறுதி நிலை. எனவே அருத்தனை அருத்துதல் ஒன்றே. உண்பித்தல் என்பது பொருள். அருந்துதலின் பிறவினை இது.

அருத்தனை, பொருத்தனை என்பது சொல் வழக்கு. இவற்றில் பொருத்தனை என்பது பொறுப்பேற்றல் எனப் பொருள்படும். விரதம் என்னும் வடசொல் இதே பொருள் உடையது. வேண்டிக் கொள்ளுதல் என்றும் கூறுவதுண்டு. அறுத்தல் பெருத்தல் என்பன வேறு பொருளில் அமைந்தவை.

**- குயில், 23.6.1959**

# 54

## புதன்

ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, என்பன கிழமையின் ஏழு நாட்களின் பெயர்கள். இவற்றில் ஞாயிறு, திங்கள், செவ்வாய், வெள்ளி ஆகிய நான்கு பெயர்களும் வெளிப்படையாகவே தமிழ்ச்சொற்கள் என்று காட்டிக் கொள்கின்றன. மற்ற புதன், சனி, வியாழன் ஆகிய மூன்றும் இவ்வாறு காட்சியளிக்கவில்லை. ஆயினும் புதன் என்பது தூய தமிழ்க்காரணப் பெயரின்றி வடசொல்லன்று என்று உணர வேண்டும்.

புதுமை என்ற பண்புப் பெயரின் 'மை' கெட்டது. ஈறு போதல் என்ற முறைமையால். எஞ்சியுள்ள புது என்பதோடு அன் ஆண்பால் இறுதிநிலை. முற்றும் அற்று என்ற முறையால் புணர, புதன் ஆயிற்று.

புதன், புதியவன், வியாழன் வெள்ளி என்பவைகளுக்கும் பிற்காலத்தில் தோன்றியவன் என அறிக. திங்களின் அண்மை யில் இருத்தல் கொண்டு, திங்களுக்கும், தாரை என்பவளுக்கும் பிறந்த பிள்ளை என்றே கதை கட்டினார்கள் வடநூற்காரர்.

எனவே புதன் வந்தவர் மொழியன்று; செந்தமிழ்ச் செல்வமே!

## வியாழன்

இது வயவாளன் என்பதன் திரிபு. வயம் - வல்லமை. ஆளன் - உடையவன், வல்லமை உடையவன் என்பது பொருள். எனவே வியாழன் என்பது தூய தமிழ்க் காரணப் பெயரே.

இதைத் திரிபு பெற்ற நிலையில் வியாழன் என்றோ திரிபுபெறாத நிலையில் வைத்து வளவாளன் என்றோ எழுதுவதில் எப்பிழையும் நேராது.

ஏழு நாட்களின் பெயர்களில் சனி என்பதைப் பழந்தமிழ் நூற்கள் காரி என்ற தூய தமிழ்ச் சொல்லால் வழங்குகின்றன. ஆதலின் சனிக்குக் காரியையே தமிழர்கள் எடுத்தாள வேண்டும். காரிக்கிழமை என்று வாய் மகிழச் சொல்க-கை மகிழ எழுதுக.

- குயில், 30.6.1958

## 55

### இலம்பாடி (லம்பாடி)

இது லம்பாடி என்று வழங்குகின்றது. லகரத்தை முதலாகக் கொண்டு தமிழ்ச் சொல் வராது. ஆதலின் இலம்பாடி என்றே எழுதுக; பேசுக. இலம்பாடி - வறியவள். இலம்பாடு உடைய ஒரு கூட்டம். வறியவனைக் குறிக்கும்போது இலம்பாடு அனைத்து மோர் முதனிலை. 'இ' பெண்பால் இறுதிநிலை என்க. ஒரு கூட்டத்தைக் குறிக்கும் போது, இலம்பாடி ஆகுபெயரால் இலம்பாடுடைய கூட்டத்தைக் குறித்தது அவ்விடத்து இகரம் அஃறிணை ஒருமை இறுதிநிலை என்க; நாற்காலி என்பதிற் போல.

எனவே இலம்பாடி தூய தமிழ்க் காரணப் பெயர் என உணர வேண்டும்.

### இலகு (லகு)

இலகல் என்பதன் முதனிலையாகிய இலகு என்பது லகு என்று வழங்கப்படுகின்றது. லகு வடசொல் என்று எண்ணிப் பிழை செய்ய வேண்டாம். இலகு - முயற்சியாலன்றி எளிதாகப் புலன்கட்கு எட்டுவது. அதைச் சார்ந்தே நாளடைவில் கனமின்மை முதலியவற்றையும் குறிக்கின்றது. மற்றும், இது இழிவழக்காக இலேசு எனவும் வழங்கும்.

எனவே லகு என்பது இலகு என்பதன் மரூஉ. அது வடசொல் அன்று, ஆயினும் லகு என்று எழுதற்க, பேசற்க. இலகு என்றே எழுதுக; பேசுக.

**- குயில், 7.7.1959**

# 56

## கேரளம்

மு.இராகவையங்கார் தம் சேரன் செங்குட்டுவன் முன்னுரையில்.

'இவர்கள் சேரர் - சேரலர் எனத் தமிழினும், கேரளர் என வடமொழியினும் வழங்கப்படுவர்.'

என்று எழுதும் வாயிலாகக் கேரளர் என்பது வடசொல் என்று தமிழர் எண்ணுமாறு செய்கின்றார்.

கேரளம் வடசொல் அன்று, சேரலம் என்பதன் மரூவு என்று சொல்லுவதும் கூடாது. அது தூய தமிழ்ச் சொல்லேயாகும். சே என்பது - கே எனத் திரிந்ததுகூட வடவர் நெறி பற்றியதன்று. அவ்வாறு சே, கே ஆவது தமிழியல்பே! செம்மனி கெம்பானது நோக்குக.

## காவிரி (காவேரி)

இது வடமொழித் தத்திதப் பெயர் என்று கூறி, அதற்காகவே ஒரு பொய்க் கதையும் கட்டிவிட்டனர். கவேரன் மகள் ஆதலின் காவிரி யாயிற்றாம் இது மட்டுமன்று. அகத்தியன் தூக்குக் குவளையில் இருந்த நீரை, இந்திரன் வேண்டுகோளால், யானைமுகன் காக்கை உருக் கொண்டு கவிழ்க்க, அது ஆற்றின் உருவாய்ப் பரவிற்றாம். இவ்வாறு அதன் தோற்றத்தைக் கூறி - தமிழகத்தின் நாகரிகத்துக்கே அகத்தியன் காரணம் என்ற பொய்ம் மூட்டைக்கு அரணாக்குவர்... காவிரி, காவேரி என்பன தூய தமிழ்க் காரணப் பெயர்கள்.

கா - சோலை. விரி - விரிந்தது. சோலை சூழ்ந்து விரிந்து நடப்பது. காட்டாறு அன்று. காவேரி - கா - ஏரி சோலையின் வளமுள்ள ஏரி போன்றது மற்றும் பல பொருளில் வரும் காவேரி, காவிரி என்ற சொற் களில் குறிக்கப்படும் ஆறானது ஆரியரும் ஆரியமும் இத் தென் னகத்தில் கால் வைக்குமுன் - பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளின் முன்னமே இருந்ததென்று தமிழ்த் தொன்னூல்களால் அறிகின்றோம்.

ஆதலின் காவிரி, காவேரி தூய தமிழ்க் காரணப் பெயர்கள்.

## ஏளனம்

'இது வடசொல்லா?' - என்றோர் அஞ்சல் கிடைத்துள்ளது நமக்கு. தூய தமிழ்ச் சொல்லாகும். எள்ளல் எனில் இகழ்தல், கேலி செய்தல் என்பன பொருள்! எள்ளலின் முதனிலையாகிய எள் என்பது முதல் நீண்டு அன், அம், சாரியைகள் பெற்றது. இதுவே ஏளிதம், ஏக்கை என்றெல்லாம் மருவி வழங்கும். ஏளனம் என்பதன் மரூஉவே கேலி என்பதையும் யாராலும் மறுக்க முடியாது.

எனவே ஏளனம், ஏளிதம், ஏக்கை, கேலி அனைத்தும் தூய தமிழ்ச் சொற்களே!

**- குயில், 14.7.1959**

# 57

## ஆலாபனம் – ஆலாபனை

என்பவை வடசொற்கள் அல்ல; தமிழ்ச் சொற்களே. ஆளத்தி என்பது ஆலாபனம் ஆலாபனை என மருவிற்று.

ஆளத்தி - இசைகளை ஆளும் முறை. காரணப் பெயர். ஆளத்தியை வக்காணம் என்றும் கூறுப. வக்கணை இழி வழக்கு.

## உவணம்

அவண் இவண் உவண் என்பவற்றில் உவண் என்பது உயரத்தைக் குறிப்பதோர் சுட்டுப் பெயர். இது அம்சாரியை பெற்று உவணம் என வழங்கும். உவணம் உயரத்திற்குப் பெயராகவே பின் அது உயரத்திற் பறக்கும் பருந்துக்கும் ஆகு பெயராயிற்று. உவணம் - உயரம், பருந்து.

இதை வடவர் வடமொழி என்று ஏமாற்றுவர். தூய தமிழ்க் காரணப் பெயராதல் அறிந்து உவக்க.

## ஈமம்

இது தமிழ்ச் சொல்; வடசொல் அன்று. இது ஈம் எனவும் தொல்காப்பியத்தில் வந்துள்ளது. ஈமம்- சுடு காடு.

## ஏமம்

இது வடசொல் அன்று; தூய தமிழ்ச் சொல். ஏமம் - நள்ளிரவு. பொன், இன்பம், காவல், பொருள், ஏமம் என்பதை ஹேம ஆக்கி அதைப் பொன்னுக்கு இட்டழைத்தார்கள் சொல்வறியராகிய வடவர்!

## தடம்

இதை வடசொல் என்று புளுகினர் வடவர். இது தூய தமிழ்ச் சொல்லாதலை - 'தடவும் கயவும் நளியும் பெருமை' என்ற தொல் காப்பியத்தாலறிக. தடம் - குளம். கயம் - குளம். தடம் - அகலமுடையது.

**- குயில், 1.9.1959**

# 58

## யாமம்

இது வடமொழி அன்று; தூய தமிழ்க் காரணப் பெயர்; யா - கட்டு; அதனடியாகப் பிறந்த தொழிற் பெயர் யாமம். யா என்ற அடி ம் என்ற சாரியையும், அம் என்ற தொழிற் பெயர் இறுதிநிலையும் பெற்றது.

## உமை

இது உமா என்ற வடசொல்லின் திரிபு என்பர் தமிழின் தொன்மை நிலை தோன்றப் பெறாதவர். அம்மை என்ற தமிழ்ச் சொல்லின் திரிபே உமை என்பது.

## ஆணவம்

வடசொல் அன்று; தூய தமிழ்க் காரணப் பெயர். அது ஆளுதல் என்பதன் அடியாகப் பிறந்தது. உயிரைத் தன் வழிப்படுத்தி ஆளுவதோர் ஆற்றலின் பெயர் ஆட்சி. ஆளுதல், ஆண்மை, ஆட்கொளல் ஆகியவற்றை நோக்குக.

ஆணவம் என்னும் சொல்லுக்கு, ஆணவ மலம் என்னும் பொருள் பழைய வடநூல்களில் யாண்டும் வழங்கப்படவில்லை என்று பன்மொழிப் பேராசிரியர் மறைமலையடிகள் அருளிச் செய்தமையும் இங்கு நோக்கத்தக்கது. ஆண்+அ+அம் =* (= ஆணவம். என்று வந்திருக்கவேண்டும்.) ஆண் - ஆள். அ சாரியை, அம் பண்புப் பெயர் இறுதிநிலை.

## சேது

அணைக்கும் செய்கரைக்கும் சிவப்புக்கும் பெயர். செம்மையின் அடியாகப் பிறந்த தூய தமிழ்க் காரணப் பெயர். தேக்கம் சிதையாமல் செம்மைப்படுத்தப்பட்டது என அணைக்குச் சேது என்ற பெயர் வந்ததை நோக்குக. செய்கரைக்கும் அவ்வாறு. செம்மை சிவப்பு ஆதல் தெளிவு.

இதை யறியாது சேது என்பது, வடசொல் என்பர். சொல்லுவார் சொல்லினும் கேட்பார்க்கு மதியிருத்தல் வேண்டுமே.

- குயில், 8.9.1959

# 59

## திருடன்

இது த்ருஷ்டி, அதாவது பிறர் பொருளில் கண் வைப்பவன் என்று காரணம் கூறி, திருஷ்டி என்றதன் அடியாகப் பிறந்து திருடன் ஆதலால் அது வடசொல் என்று மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிபோடுவர் வடவர்.

திரு - செல்வம்; பிறர் செல்வமே கருதி வாழ்வோன் திருவன். திருவன் என்பதே திருடன் எனத் திரிந்தது என அறிதல் வேண்டும். தமிழ்ச் செய்யுட்களில் திருவன் என்று வருவதே பெருவழக்கு.

## மூலம்

வடசொல்லன்று; மூ - மூத்த தன்மை. காரணம் மூ என்பதன் அடியாக மூலம் என்ற சொல் தோன்றிற்று. மூ + அம் = மூவம். தமிழில் வகரம் லகரமாக வழங்கும்; ஆவம், ஆலம் என வழங்கியது போல. ஆலம், ஆவம், அம்பின் கூடு.

வேர் என்பது மரத்தின் காரணம் ஆம்போது வேர் மூலமாம். மற்றும் பிற.

**- குயில், 15.9.1959**

## 60

## அருச்சனை

அருந்தல் - உண்ணல், உட்கொள்ளல், மனநிறைவு பெறல்; இது தன்வினை.

அருத்தல் - உண்ணச் செய்தல், உட்கொள்ளச் செய்தல், மன நிறைவு பெறச் செய்தல். இது பிறவினை. இந்த அருந்தல் என்பது அருந்து + அன்+ஐ என இடையில் அன்சாரியையும் ஐ தொழிற் பெயர் இறுதி நிலையும் பெற்று வருதல் தமிழில் பெருவழக்கு: பொருத்தனை என்பது காண்க.

இனி அருத்தளை என்பதன் போலி அருச்சனை என்பது; இது இளைஞரும் அறிந்ததே. பொரித்து - பொரிச்சு, விரித்து - விரிச்சு என்பவற்றையும் நோக்குக.

அருச்சனை எங்கள் வடசொல் என்று எவன் சொல்வான்; எவன் கேட்பான்.

எனவே அருச்சனை தூய தமிழ்க் காரணப் பெயர் என்று கடைபிடிக்க.

## வண்ணம்

இது வர்ணம் என்ற வடசொல்லின் சிதைவாம். வர்ணம் சிதைந்தால் வருணம் என்றல்லவா வரவேண்டும். அப்படித்தானே வந்தும் உளது.

சமநிலைக்கு மேல் ஏற்படும் சிறப்பு நிலையை வளமை என்பர் தமிழர். வண்மை என்ற சமநிலைக்கு மேல் ஏற்பட்ட அழகு, நிறம் இவற்றை வண்ணம் என்றனர். வண்மை - வண்ணம்; வண்ணம் என்பதில் அம் பண்புப் பெயர் இறுதி நிலை; சிவப்பு என்பதிற் போல.

வண்ணம் - தூய தமிழ்க் காரணப் பெயர்.

## அலாதி

பிறமொழிச் சொல்லன்று. வடசொல்லும் அன்று.

அலாதது - அல்லாதது என்பதன் தொகுத்தல். இருப்பு முறை அல்லாதது, தனி என்பன அதன் பொருள்கள்.

அலாதது என்பதன் மரூஉ அலாதி என்பது.

எனவே அலாதி தூய தமிழ்க் காரணப் பெயர் என்று தெளிக.

## ஏளனம்

எள்ளுதல் - இகழ்தல். அதனடி எள். அது முதனீட்சி பெற்று அன்சாரியையும் அம் தொழிற் பண்பு இறுதி நிலையும் பெற்று ஏளனம் ஆயிற்று.

இந்த ஏள் என்பதே கேள் - கேளி - கேலி என மருவிற்று. அவலல் - கவலல் ஆனதும் காண்க. எனவே ஏளனம் கேலி தூய தமிழ்க் காரணப் பெயர்களே என்க.

- குயில், 22.9.1959